# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093604

1. District : DVAC | PS: VAC, HQRS | Year: 2019 | FIR No.: 21 | Date 30.10.19
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7, 12
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day — Date from 25.10.19 — Date to: 26.10.19
குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் 15.00h — நாள் வரை 06.30 hrs
Time Period : — Time from : — Time to :
நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை

(b) Information Received at PS Date : 26.10.19 — Time : 11.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 30.10.19 — Time 15.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South 10 km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : — (b) Address : Block development office, St. Thomas Mount Panchayat Union, Sitlapakkam First Main Road, Sitlapakkam, Chennai - 64
முறைக் காவல் எண் — முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : P. Sarala — (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : — (d) Nationality : Indian — (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue :
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspection Cell Officer — (g) Address : District Inspection Cell office, Chennai.
தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) M. Baskaran, BDO (VP) 2) A. Sankaran BDO (BD) 3) K.N. Venkatesan, Dy. BDO 4) Jayaram, Perumbakkam Panchayat Secretary 5) Velusamy, Nanmangalam Panchayat Secretary 6) Rajeshwari Sothupakkam, Chitlapakkam Panchayat Secretary 7) N.S. Babu, Madavakkam Panchayat Secretary 8) John Jose Singh, Ottiyambakkam Panchayat Secretary 9) Manikandan, Private Individual 10) Gunasekaran, Private Individual

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

(i) Rs. 22,67,666/- Cash
(ii) 76 gram Gold Jewels.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Content is enclosed in separate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed to the Complainant

K. S. Anitha 30/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.19 at 15.30 hrs

Name: பெயர் K.S. Anitha
Inspector of Police
Rank: நிலை S.I. ...... No. எண் ....... XXI
Chennai - 16.

**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண். 21 / 2019, சட்டப்பிரிவு சட்ட பிரிவு 7 மற்றும் 12 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 12ன் தொடர்ச்சி பின்வருமாறு.**

சென்னை 64, சிட்லபாக்கம் முதல் மெயின் ரோடு புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் (இருப்பு), சிட்லபாக்கத்தில் இயங்கி வரும் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை தொடர்பாக திருமதி.பா.சரளா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், சென்னை மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், சென்னை மாவட்டம் அவர்கள் 26.10.2019 தேதியிட்டு அளித்த புகார் மனு தொடர்பாக எனது உயர் அதிகாரியின் அனுமதி பெற்று இன்று 30.10.2019ம் தேதி 15.00 மணிக்கு இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது. திருமதி.பா.சரளா அவர்கள் அளித்த புகாரின் விவரம் பின்வருமாறு.

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.பா.சரளா,<br>துணை ஆய்வுக்குழு அலுவலர்,<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,<br>சென்னை மாவட்டம்,<br>சென்னை-1 | காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு பிரிவு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

நக/அ/572/2019 நாள் - 26.10.2019

அய்யா,

பொருள் - இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை - 64, சிட்லபாக்கம் முதல் மெயின் ரோடு, புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம் இருப்பு சிட்லபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 25.10.2019 மற்றும் 26.10.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக.

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு பிரிவு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை 25.10.2019-ம் தேதி மதியம் 3 மணிமுதல் மறுநாள் 26.10.2019 காலை 06.30 மணிவரை சென்னை-64, சிட்லபாக்கம் முதல் மெயின் ரோடு, புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம் இருப்பு சிட்லபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டு தணிக்கை நடவடிக்கையின் செயல்முறை ஆணை மற்றும் கணக்கில் வராத கைப்பற்றப்பட்ட பணம் ரூ.22,67,568/-ஐ (ரூபாய் இருபத்தி இரண்டு லட்சத்து அறுபத்தி ஏழுாயிரத்து ஐநூற்றி அறுபத்தி எட்டு) மற்றும் தங்க

ஆபரணங்கள் (செயின்-32.500 கிராம், பிராஸ்லெட் -43.550 கிராம்) மற்றும் ஆவணங்கள் மேல்நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி கூட்டுத் தணிக்கை செயல் முறை ஆணையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கைக்குரிய,

இணைப்பு- மேற்கண்டவாறு

ஒப்பம்/- பா.சரளா
துணை ஆய்வுக்குழு அலுவலர்,
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,
சென்னை மாவட்டம்,
சென்னை-1.

To Tmt.K.S.Anitha, Inspector, SIC – 2 to register a case & Investigate. Sd/- (M.Kumaragurubaran), DSP/SIC – 2, 30.10.2019.

Madam, Received this complaint on 30.10.2019. After getting permission from the higher officers, this day ( 30.10.2019) at 15.00hrs, I am registering a case in V&AC, Hqrs, Crime No.21 / 2019 u/s 7,12 of Prevention of Corruption (Ammendment) Act 2018 and taken up for investigation Sd/- (K.S.Anitha), Inspector of Police, V&AC, SIC – II, Chennai -16, 30.10.2019.

<u>இருதுறை கூட்டுத் தணிக்கை நடவடிக்கை குறிப்பு பின்வருமாறு.</u>

சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சிறப்பு புலனாய்வுக் குழு அணி-2-ன் துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் மேற்படி பிரிவு காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் இணைந்து இன்று (25.10.2019) சென்னை-64, சிட்லபாக்கம் முதல் மெயின் ரோடு, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் (இருப்பு) சிட்லபாக்கம், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை

| | |
|---|---|
| இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திருமதி.பா.சரளா,<br>மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்,<br>சென்னை மாவட்ட ஆய்வுக்குழு<br>அலுவலகம், சென்னை மாவட்டம்<br><br>2. திருமதி.பா.ரேவதி,<br>ஆய்வுக்குழு ஆய்வாளர்,<br>சென்னை மாவட்ட ஆய்வுக்குழு<br>அலுவலகம், சென்னை மாவட்டம் |

| | |
|---|---|
| | 3. திரு.எம்.குமரகுருபரன்,<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>4. திருமதி.எஸ்.ஜூடி அபிகேல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>5. திருமதி.சு.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>6. திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை. |

சென்னை-64, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் (இருப்பு) சிட்லபாக்கத்தில் இயங்கி வரும் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் அரசு பணிக்காக மேற்படி அலுவலகத்திற்கு வரும் பொது மக்களிடம் கையூட்டு பெறுவதாகவும், மேலும் மேற்படி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பஞ்சாயத்து செயலர்கள் பொது மக்களிடம் லஞ்சப்பணத்தை வசூல் செய்து அதை இன்று மேற்படி அலுவலகத்திற்கு கொண்டு வந்து வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமும் உதவி இயக்குநர்/தனி அலுவலர் (ஊராட்சிகள்) என்பவரிடம் கொடுக்க உள்ளதாக இரகசிய நம்பத்தகுந்த தகவல் கிடைத்தது. மேற்படி தகவலை எனது உயரதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு, இன்று பிற்பகல் 12 மணியளவில் எனது அலுவலக பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன். இந்த தகவலை சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர் இருதுறையின் சம்மதத்தின்பேரிலும் எனது உயரதிகாரிகளின் அனுமதியின் பேரிலும் மேற்படி அலுவலகத்தில் இன்று 25.10.2019 இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

2) தொடர்ந்து இன்று 25.10.2019 மதியம் சுமார் 3 மணியளவில், சென்னை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.பா.சரளா அவர்கள், திருமதி.பா.ரேவதி, ஆய்வுக்குழு ஆய்வாளர், சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சிறப்பு புலனாய்வுப் பிரிவு-2, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ம.குமரகுருபரன், காவல் ஆய்வாளர்கள் திரு.சு.வள்ளிநாயகம், திருமதி.எஸ்.ஜூடி அபிகெய்ல் மற்றும் திருமதி.கே.எஸ்.அனிதா சகிதம் மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் பிற்பகல் 3 மணியளவில் இருதுறை கூட்டு தணிக்கை தொடங்கப்பட்டது.

3) கூட்டு தணிக்கை மேற்கொண்டபோது மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் வளாகத்திற்குள் சில கார்கள் நிறுத்தப்பட்டிருந்தது, சில நபர்கள் நின்றிருந்தனர். மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலகம் வடக்கு தெற்காக அமைந்திருந்தது. அலுவலகத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேற்படி அலுவலகத்தில் முதலில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அறையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4) அந்த அறையில் கிழக்கு நோக்கி இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் ம.பாஸ்கரன் என்றும், இவ்வலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக (கிராம ஊராட்சி) பணிபுரிவதாக தெரிவித்தார். இன்று புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 15 ஊராட்சி செயலர்களையும் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.எம்.கமலகண்ணன் அவர்களின் தலைமையில் இந்த அலுவலகத்தில் நடைபெறும் சுகாதாரப் பணிகள் தொடர்பான கூட்டத்திற்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டம்) திரு.ஏழுமலை என்பவர் மூலம் அலுவலக தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து வரவழைத்து ஆணையர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களின் அறையில் வைத்து இன்று காலை சுமார் 11 மணிமுதல் பகல் 12 மணிவரை கூட்டம் நடைபெற்றதாகவும் அதில் 11 பஞ்சாயத்து செயலர்கள் கலந்து கொண்டதாகவும் தெரிவித்தார். பின்னர் அவசரமாக உதவி இயக்குநர் திரு.கமலகண்ணன் பகல் சுமார் 12.30 மணியளவில் வெளியே சென்றுவிட்டதாக கூறினார்.

5) மேற்படி ம.பாஸ்கரன் அவர்களிடம் உள்ள பணம் குறித்து கேட்க தனது சட்டை மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.27,700/- இருந்தது. இந்த பணம் குறித்து திரு.ம.பாஸ்கரன் அவர்களிடம் கேட்ட போது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறினார். இந்த பணம் எவ்வாறு வந்தது என்று கேட்டபோது அவர் மௌனமாக இருந்தார். எனவே அடிப்படை செலவிற்காக அவரிடம் ரூ.2,700/- திருப்பி அளிக்கப்பட்டு, மீதி பணம் ரூ.25,000/- லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற தகுந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | Rs.2000 x 12 | Rs.24,000.00 |
| 2 | Rs.500 x 2 | Rs.1,000.00 |
| | Total | Rs.25,000.00 |

6) அதே அறையில் மேற்படி அ.பாஸ்கரன் அவர்களின் முன்பு இருக்கைக்கு எதிரே மேற்கு நோக்கி பிளாஸ்டிக் சேரில் தெற்கிலிருந்து முதலாவதாக முதல் வரிசையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் அ.பாஸ்கரன் என்றும் தான் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ஆக இவ்வலுவலகத்தில் பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது சட்டை மேல் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.2,840/- இருந்தது. அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | Rs.2000 x 1 | Rs.2,000.00 |
| 2 | Rs.500 x 1 | Rs.500.00 |
| 3 | Rs.100 x 2 | Rs.200.00 |

| | | |
|---|---|---|
| 4 | Rs.50 x 2 | Rs.100.00 |
| 5 | Rs.20 x 1 | Rs.20.00 |
| 6 | Rs.10 x 2 | Rs.20.00 |
| | Total | Rs.2,840.00 |

இந்த பணம் குறித்து திரு.அ.பாஸ்கரன் அவர்களிடம் கேட்ட போது எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற தகுந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டபோது தனது பேண்ட் பின்பக்க பாக்கெட்டின் மணிபர்ஸிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.900/- (Rs.500 x 1 ; Rs.100 x 3 ; Rs.50 x 2) இருந்தது. மேற்படி பணம் ரூ.900/- குறித்து திரு.அ.பாஸ்கரன் அவர்களிடம் கேட்டபோது தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.900/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

7) அதே அறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் இருக்கைக்கு எதிரே மேற்கு நோக்கி முதல் வரிசையில் தெற்கிலிருந்து இரண்டாவதாக பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் எஸ்.ஜெயராம் என்றும் தான் இந்த வட்டார வளர்சசி அலுவலகத்தின் கீழ் வரும் பெரும்பாக்கம் ஊராட்சி செயலாளராகப் பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்டின் வலதுபக்க முன்பக்க பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.27,300/- இருந்தது. அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | Rs.2000 x 10 | Rs.20,000.00 |
| 2 | Rs.500 x 9 | Rs.4,500.00 |
| 3 | Rs.200 x 10 | Rs.2,000.00 |

| | | |
|---|---|---|
| 4 | Rs.100 x 6 | Rs.600.00 |
| 5 | Rs.50 x 3 | Rs.150.00 |
| 6 | Rs.20 x 1 | Rs.20.00 |
| 7 | Rs.10 x 3 | Rs.30.00 |
| | Total | Rs.27,300.00 |

இந்த பணம் குறித்து திரு.எஸ்.ஜெயராம் அவர்களிடம் கேட்ட போது எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணத்துடன் 01.02.2019 தேதியிட்ட Star Electricals Works என்றும் கணக்கு எண் 6157134088 என்று குறிப்பிட்டுள்ள இந்தியன் வங்கி செலுத்தச்சீட்டு ஒன்று இருந்தது. பணம் ரூ.27,300/- மற்றும் செலுத்தச்சீட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் கையில் வைத்திருந்த POTHYS என்று அச்சிடப்பட்ட கட்டை துணிப்பையில் இருந்து இரண்டு கவர்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் வெள்ளை நிற கவரில் இருந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது பணம் ரூ.30,000/- (Rs.2000 x 15) இருந்தது. மற்றும் இரண்டாவதாக இருந்த காக்கி நிற கவரில் இருந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது பணம் ரூ.70,000/- (Rs.2000 x 35) இருந்தது. இந்த இரண்டு கவர்களில் இருந்த பணம் மொத்தம் ரூ.1,00,000/- குறித்து திரு.எஸ்.ஜெயராம் அவர்களிடம் கேட்ட போது எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற தகுந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி ஜெயராம் பணம் வைத்திருந்த POTHYS கட்டை துணிப்பையில் கீழ்க்கண்ட ஆவணங்கள் இருந்தது.

| வ.எண். | ஆவணம் | தாள்கள் |
|---|---|---|
| 1. | செலவினச் சீட்டு (Voucher No.199/23.10.2019) | 6 |
| 2. | செலவினச் சீட்டு (Voucher No.196/22.10.2019) | 8 |
| 3. | செலவினச் சீட்டு (Voucher No.207/23.10.2019) | 3 |
| 4. | செலவினச் சீட்டு (Voucher No.195/23.10.2019) | 7 |

| | | |
|---|---|---|
| 5. | செலவினச் சீட்டு (Voucher No.205/23.10.2019) | 5 |
| 6. | செலவினச் சீட்டு (Voucher No.193/21.10.2019) | 6 |
| 7. | செலவினச் சீட்டு (Voucher No.206/23.10.2019) | 7 |
| 8. | செலவினச் சீட்டு (Voucher No.203/23.10.2019) | 3 |
| 9. | செலவினச் சீட்டு (Voucher No.209/24.10.2019) | 12 |
| 10. | செலவினச் சீட்டு (Voucher No.208/23.10.2019) | 12 |
| 11. | 2018-2019 பெரும்பாக்கம் ஊராட்சி டெபாசிட் பதிவேடு - Vol-II | 106 பக்கங்கள் |
| 12. | 2019-2020 பெரும்பாக்கம் ஊராட்சி ரொக்கப் பதிவேடு | 116 பக்கங்கள் |
| 13. | 2019-2020 பெரும்பாக்கம் ஊராட்சி அலுவலக குறிப்பு பதிவேடு | 107 பக்கங்கள் |

மேற்படி ஆவணங்கள் குறித்து திரு.ஜெயராம் அவர்களிடம் கேட்டபோது வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ம.பாஸ்கரன் அவர்களை சந்தித்து கான்டிராக்டர்களுக்கு டெபாசிட்டை திருப்பி அளிப்பதற்காக செக் மற்றும் வவுச்சர்களில் கையெழுத்து வாங்குவதற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். கைப்பற்றப்பட்ட பணத்திற்கும் மேற்படி ஆவணங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் மேற்படி ஆவணங்கள் நகல் எடுக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. அசல் ஆவணங்களை மேல் நடவடிக்கைக்காக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஏழுமலை அவர்களிடம் திருப்பி அளிக்கப்பட்டது.

8) மேலும் திரு.ஜெயராம் அவர்களிடம் இந்த அலுவலகத்திற்கு அவர் வந்த வாகனம் குறித்து கேட்டதற்கு பதிவு எண்.TN 14 F 4210 உள்ள தனது Alto காரில் வந்ததாகவும் காரை வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்திற்குள் நிறுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார். மேற்படி காரில் பணமோ ஆவணமோ உள்ளதா என்று கேட்டதற்கு இருப்பதாக கூறி எங்களை அழைத்து சென்று அவரது காரை அவரே திறந்து மேற்படி காரில் டிக்கியிலிருந்து KALYAN JEWELLERS என்று அச்சிடப்பட்ட சிகப்பு நிற ரெக்ஸின் பேக்கின் உள்ளே இருந்து ஆவணங்களையும்

பணத்தையும், இரண்டு கல்யாண் ஜுவல்லர்ஸ் நகைப்பெட்டிகளையும் எடுத்து ஆஜர் செய்தார். அதில் மஞ்சள் நிற திருமண தாம்பூல துணிபையிலிருந்து (மணமக்கள்: K.விமல்குமார் - I.அனுஷ்யா, மணநாள்: 27.08.2017, மண இடம்: திருமால் திருமண மஹால், T-தேவனூர், திருக்கோவிலூர் உள்ளிட்ட வாசகங்கள் சிவப்பு கலரில் அச்சிடப்பட்டுள்ளது) பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.5 லட்சம் இருந்தது. அதில் உள்ள பணத்தின் விவரம் விவரம் பின்வருமாறு

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | Rs.2000 x 100 | Rs.2,00,000.00 |
| 2 | Rs.500 x 600 | Rs.3,00,000.00 |
| | Total | Rs.5,00,000.00 |

9) மேற்படி பணம் குறித்து திரு.ஜெயராம் அவர்களிடம் கேட்டதற்கு எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். எனவே மேற்படி பணம் அதிகாரிகளுக்கு கொடுப்பதற்காக வைத்துள்ள பணம் என்ற ஐயத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி ரெக்ஸின் பேக்கிலிருந்து எடுத்து ஆஜர் செய்த KALYAN JEWELLERS பெயர் அச்சிடப்பட்ட சிகப்பு நிறத்தில் நகைப்பெட்டி ஒன்றும் காபி நிற நகைப்பெட்டி ஒன்றையும் பெற்று திறந்து பார்க்கப்பட்டது. அதில் சிகப்பு நிற நகைப்பெட்டியிலிருந்த செயினை காண்பித்து திரு.ஜெயராம் அவர்களிடம் கேட்டபோது அது தங்க செயின் என்றும் 32.500 கிராம் எடை உள்ளது என்றும் 19.10.2019 அன்று கல்யாண் ஜுவல்லர்ஸ் நகைக்கடையில் வாங்கியதாக தெரிவித்தார். 2வதாக இருந்த காபி கலர் நகைப்பெட்டியில் இருந்து ஒரு பிரேஸ்லட்டை எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து அவரிடம் கேட்டதற்கு தங்க பிரேஸ்லட் என்றும் அதன் எடை 43.550 கிராம் என்றும் 19.10.2019 அன்று கல்யாண் ஜுவல்லர்ஸ் நகைக்கடையில் வாங்கியதாக தெரிவித்தார். மேற்படி இரண்டு தங்க ஆபரணங்களும் லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்ற ஐயத்தின்பேரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி ரெக்ஸின் பையில் பணம் மற்றும் தங்க நகைகளுடன் கீழ்கண்ட ஆவணங்கள் இருந்தது.

| .எண். | ஆவணம் | தாள்கள் |
|---|---|---|
| 1. | Sales Invoice Bill No.CHIGNSC10421, dt.19.10.2019 of Kalyan Jewellers India Ltd., T.Nagar, Chennai. | 2 |
| 2. | Sales Invoice Bill No.CHIGNSC10414, dt.19.10.2019 of Kalyan Jewellers India Ltd., T.Nagar, Chennai. | 1 |
| 3. | Dhanvarsha – Kalyan Priority – Gold Scheme Registration of Kalyan Jewellers India Limited in the name of Jayaraman S, dt.19.10.2019. | 1 |
| 4. | Planning permit PP No.1607/19, dt.24.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of S.Mahesh babu. | 5 |
| 5. | Planning permit PP No.678/19, dt.24.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of Shaji Paramesh Vallinayagam. | 9 |
| 6. | Planning permit PP No.1602/19, dt.24.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of P.Valarmathi. | 9 |
| 7. | Planning permit PP No.1609/19, dt.24.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of D.Arul Jagadish. | 8 |
| 8. | Planning permit PP No.667/19, dt.22.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of R.Udayachandran. | 7 |
| 9. | Planning permit PP No.1587/19, dt.18.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of J.Lakshmana Swamy. | 9 |
| 10. | Planning permit PP No.656/19, dt.17.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of S.Krishnan. | 7 |

மேலும் அதே அறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் இருக்கைக்கு எதிரே மேற்கு நோக்கி தெற்கிலிருந்து முதல் வரிசையில் மூன்றாவதாக பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் மணிகண்டன், த/பெ.ராஜேந்திரன், எண்.8, நடேசன் சாலை, பழைய பல்லாவரம், சென்னை-117 என்றும் தனக்கு சுயமாக தொழில் எதுவும் இல்லை என்றும் மேற்படி

இந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பொது மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று இந்த அலுவலகத்தில் கொடுத்து வேலையை முடித்து கொடுத்தபின் பணம் பெற்றுக் கொள்வதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்டின் இடது முன்பக்க பாக்கெட்டிலிருந்து பணத்தையும் ஒரு காக்கி கவரையும் எடுத்து ஆஜா் செய்தார். அவா் அளித்த ரொக்கப்பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.14,000/-(Rs.2000 x 7) இருந்தது. காக்கி கவரை திறந்து பார்த்தபோது 16 ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இருந்தது (Rs.500 x 16 = Rs.8,000/-) இருந்தது. மேற்படி காக்கி கவரின் மீது அகரம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி மொத்த பணம் ரூ.22,000/- குறித்து திரு.மணிகண்டன் அவா்களிடம் கேட்ட போது எந்த பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற தகுந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்துடன் கீழ்கண்ட ஆவணங்கள் இருந்தது.

| வ.எண். | ஆவணம் | தாள்கள் |
|---|---|---|
| 1. | Planning permit PP No.1611/2019, dt.25.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of N.Tejaram | 9 |
| 2. | Planning permit PP No.1612/2019, dt.25.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of Selvam. | 9 |
| 3. | Planning permit PP No.1613/2019, dt.25.10.2019 issued by the Commissioner, St.Thomas Mount Panchayat Union in the name of P.Thirumurugan & V.Revathi. | 9 |
| 4. | File in Reg No.8953/2019/A4 on the file of St.Thomas Mount Panchayat Union. | 76 |
| 5. | File in Reg No.8951/2019/A4 on the file of St.Thomas Mount Panchayat Union. | 86 |
| 6. | File in Reg No.8952/2019/A4 on the file of St.Thomas Mount Panchayat Union. | 74 |

| | | |
|---|---|---|
| 7. | Duplicate copy of Letter No.ப.மு.8726/2019/அ4, நாள்.25.10.2019 issued by Tr.A.Baskaran, Commissioner, St.Thomas Mount Panchayat Union, Chennai-64. | 1 |
| 8. | Duplicate copy of Letter No.ப.மு.8727/2019/அ4, நாள்.25.10.2019 issued by Tr.A.Baskaran, Commissioner, St.Thomas Mount Panchayat Union, Chennai-64. | 1 |
| 9. | Duplicate copy of Letter No.ப.மு.8696/2019/அ4, நாள்.25.10.2019 issued by Tr.A.Baskaran, Commissioner, St.Thomas Mount Panchayat Union, Chennai-64. | 1 |

மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி திரு.மணிகண்டனிடம் மேலும் அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது மணிபர்சை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்த்தபோது பணம் ரூ.1,450/- இருந்தது. மேற்படி பணம் குறித்து மணிகண்டனிடம் கேட்டதற்கு தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். மேற்படி விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.1,450/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

10) மேலும் அதே அறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் இருக்கைக்கு எதிரில் இரண்டாவது வரிசையில் தெற்கிலிருந்து முதலாவதாக பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் வேலுச்சாமி என்றும் புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு உட்பட்ட நன்மங்கலம் கிராம பஞ்சாயத்து செயலாளராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டதற்கு அவரது பேண்ட் வலது புற முன்பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.35,240/- இருந்தது. இந்த பணம் குறித்து திரு.எஸ்.வேலுச்சாமி அவர்களிடம் கேட்ட போது அவரது அதிகாரிகளுக்கு கொடுக்க வைத்திருப்பதாகவும் இது வழக்கமாக செய்வதுதான் என்று கூறினார். எனவே அவரிடம் செலவிற்கு ரூ.240/- திருப்பி அளிக்கப்பட்டது. மீதி பணம் ரூ.35,000/- லஞ்ச

பணமாக இருக்கலாம் என்ற தகுந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | Rs.2000 x 12 | Rs.24,000.00 |
| 2 | Rs.500 x 18 | Rs.9,000.00 |
| 3 | Rs.200 x 10 | Rs.2,000.00 |
| | Total | Rs.35,000.00 |

மேற்படி திரு.எஸ்.வேலுச்சாமி வைத்திருந்த கருப்பு நிற ரெக்ஸின் கைப்பையில் என்ன உள்ளது என்று கேட்க அதிலிருந்து கீழ்கண்ட ஆவணங்களை எடுத்து ஆஜர் செய்தார்.

| வ.எண். | ஆவணம் | தாள்கள் |
|---|---|---|
| 1. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.131/2019-20, நாள் 23.10.2019 (அசல்) | 4 |
| 2. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.131/2019-20, நாள் 23.10.2019 (நகல்) | 4 |
| 3. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.132/2019-20, நாள் 23.10.2019 (அசல்) | 5 |
| 4. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.132/2019-20, நாள் 23.10.2019 (நகல்) | 4 |
| 5. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.133/2019-20, நாள் 23.10.2019 (அசல்) | 6 |

| | | |
|---|---|---|
| 6. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.133/2019-20, நாள் 23.10.2019 (நகல்) | 4 |
| 7. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.134/2019-20, நாள் 23.10.2019 (அசல்) | 5 |
| 8. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.134/2019-20, நாள் 23.10.2019 (நகல்) | 4 |
| 9. | Thirupathi Stores அவர்களுக்கு நன்மங்கலம் ஊராட்சி கொடுக்க வேண்டிய ரூ.81,805/-க்கான இந்தியன் வங்கி காசோலை நாள்.18.10.2019, எண்.631931 (நகல்) | 1 |
| 10. | 2019-2020 நன்மங்கலம் ஊராட்சி ரொக்கப் பதிவேடு | 120 பக்கங்கள் |
| 11. | நன்மங்கலம் ஊராட்சி பொது சுகாதாரம் செலவு சீட்டு எண்.117 நாள்.18.10.2019 | 20 |
| 12. | நன்மங்கலம் கிராம ஊராட்சி இந்தியன் வங்கி மடிப்பாக்கம் கிளை கணக்கு எண்.453520900 என்ற வங்கி பாஸ் புத்தக நகல் | 1 |
| 13. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.117/2019-20, நாள் 03.10.2019 (அசல்) | 7 |
| 14. | புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ம.பாஸ்கரன் அவர்களின் மனைப்பிரிவு வரன்முறை ஆணை க.உ.எண்.117/2019-20, நாள் 03.10.2019 (நகல்) | 5 |
| 15. | 2019-2020 நன்மங்கலம் ஊராட்சி அனுமதி பதிவேடு | 22 |
| 16. | 2019-2020 நன்மங்கலம் ஊராட்சி கட்டிட வரைபட அனுமதி வழங்கும் பதிவேடு | 35 |

மேற்படி ஆவணங்கள் குறித்து திரு.வேலுச்சாமி அவர்களிடம் கேட்டதற்கு மேற்படி ஆவணங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ம.பாஸ்கரன் அவர்களிடம் கையெழுத்து பெற எடுத்து வந்ததாக தெரிவித்தார். கையெழுத்துப்போட முன்பும் போட்ட பின்பும் பணம் கொடுப்பது வழக்கம் என்றும் இல்லையென்றால் வேலை நடக்காது என்றும் தெரிவித்தார். மேற்படி பணத்திற்கும் இந்த ஆவணங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பதை ஆய்வு செய்ய மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல் கைப்பற்றப்பட்டது.

11) மேலும் அதே அறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் இருக்கைக்கு எதிரில் இரண்டாவது வரிசையில் தெற்கிலிருந்து இரண்டாவதாக பிளாஸ்டிக் சேரில் அமர்த்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் ராஜேஸ்வர சேதுபதி என்றும் தான் சித்தாலப்பாக்கம் ஊராட்சி செயலாளராக பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தன்னிடமிருந்து வெள்ளை நிற துணிப்பையிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.44,770/- இருந்தது. அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | Rs.500 x 69 | Rs.34,500.00 |
| 2 | Rs.200 x 1 | Rs.200.00 |
| 3 | Rs.100 x 100 | Rs.10,000.00 |
| 4 | Rs.50 x 1 | Rs.50.00 |
| 5 | Rs.20 x 1 | Rs.20.00 |
| | Total | Rs.44,770.00 |

இந்த பணம் குறித்து திரு.ராஜேஸ்வர சேதுபதி அவர்களிடம் கேட்ட போது வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தீபாவளி செலவிற்கு கொடுப்பதற்காக பொது மக்களிடம் வசூல் செய்து கொண்டு வந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் லஞ்ச பணம் என்ற ஐயத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

12) மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறைக்கு வெளியே வராண்டாவில் கையில் கருப்பு நிற கைப்பையுடன் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் என்.எஸ்.பாபு என்றும் தான் மேடவாக்கம் பஞ்சாயத்து செயலாளராக பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது பேண்டின் வலதுபக்க முன்பக்க பாக்கெட்டிலிருந்து மணிபர்சை எடுத்து ஆஜர் செய்தார். அந்த மணிபர்சை பார்த்தபோது அதில் பணம் ரூ.1,000/- (Rs.500 x 2) இருந்தது. மேற்படி பணம் குறித்து கேட்டதற்கு தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி விளக்கத்தை ஏற்றுக்கொண்டு பணம் ரூ.1,000/-த்தை அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது. தொடர்ந்து அவர் தனது இடது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்த்ததில் ரூ.28,300/- (Rs.500 x 54 ; Rs.100 x 13) இருந்தது. இந்த பணம் குறித்து திரு.என்.எஸ்.பாபு அவர்களிடம் கேட்ட போது வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தீபாவளி செலவிற்கு கொடுப்பதற்காக பொது மக்களிடம் வசூல் செய்து கொண்டு வந்த பணம் என்று கூறினார். மேற்படி பணம் லஞ்ச பணம் என்ற ஐயத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி கைபையில் இருந்து ஒரு வெள்ளை கவரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கவரில் Lion. N.S.Babu, Medavakkam என்றும் மேடவாக்கம் பொழிச்சலூர் என்றும் பேனாவில் எழுதப்பட்டிருந்தது. மேற்படி கவரை ஆய்வு செய்தபோது ரூ.2,00,000/- (Rs.2000 x 33 ; Rs.500 x 268) இருந்தது. இந்த பணம் குறித்து திரு.என்.எஸ்.பாபு அவர்களிடம் கேட்ட போது இவ்வலுவலகத்திலுள்ள இரண்டு BDO-க்களுக்கும், AD பஞ்சாயத்து அவர்களுக்கும் தீபாவளிக்கு கொடுப்பதற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். ஊராட்சி தொடர்பான ஒவ்வொரு கோப்பிலும் மேற்கண்ட அதிகாரிகளிடம் கையெழுத்து பெறும்போது பணம் கொடுக்க வேண்டும் என்றும் AD பஞ்சாயத்து மாவட்ட அதிகாரி என்பதால் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இவ்வலுவலகத்திற்கு இன்று வந்த AD பஞ்சாயத்து அவர்கள் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அழைப்பதாக கூறி மதியம் 12.30 மணியளவில் புறப்பட்டு சென்றுவிட்டதாக கூறினார். மேற்படி லஞ்ச பணம் ரூ.2,28,300/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ.எண். | ஆவணம் | தாள்கள் |
|---|---|---|
| 1. | மேடவாக்கம் ஊராட்சி சாலை பராமரிப்பு செலவினச் சீட்டு (Voucher No.202/2019-20) dt.17.10.2019 | 11 |
| 2. | மேடவாக்கம் ஊராட்சி அச்சக செலவு செலவினச் சீட்டு dt.19.10.2019 | 3 |
| 3. | மேடவாக்கம் ஊராட்சி சாலை பராமரிப்பு செலவினச் சீட்டு (Voucher No.203/2019-20) dt.17.10.2019 | 11 |
| 4. | மேடவாக்கம் ஊராட்சி சாலை பராமரிப்பு செலவினச் சீட்டு (Voucher No.204/2019-20) dt.18.10.2019 | 13 |
| 5. | மேடவாக்கம் ஊராட்சி சாலை பராமரிப்பு செலவினச் சீட்டு (Voucher No.205/2019-20) dt.19.10.2019 | 11 |
| 6. | 2019-2020ம் ஆண்டுக்கான மேடவாக்கம் ஊராட்சி படிவம்-18 பதிவேடு | 37 பூர்த்தி செய்யப்பட்ட பக்கங்கள் |
| 7. | 2019-2020 ஆண்டுக்கான மேடவாக்கம் ஊராட்சி ரொக்கப் பதிவேடு | 123 பூர்த்தி செய்யப்பட்ட பக்கங்கள் |
| 8. | மேடவாக்கம் ஊராட்சி செலவினச் சீட்டு (Voucher No.222/23.10.2019) | 2 |
| 9. | மேடவாக்கம் ஊராட்சி செலவினச் சீட்டு (Voucher No.223/19-20, dt.23.10.2019) | 8 |
| 10. | மேடவாக்கம் ஊராட்சி செலவினச் சீட்டு (Voucher No.224/19-20, dt.24.10.2019) | 6 |
| 11. | மேடவாக்கம் ஊராட்சி செலவினச் சீட்டு (Voucher No.225/19-20, dt.24.10.2019) | 13 |

மேற்படி ஆவணங்கள் குறித்து திரு.என்.எஸ்.பாபு அவர்களிடம் கேட்டதற்கு மேற்படி ஆவணங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ம.பாஸ்கரன் அவர்களிடம் கையெழுத்து பெற எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்திற்கும் இந்த

ஆவணங்களுக்கும் தொடர்பு உள்ளதா என்பதை ஆய்வு செய்ய மேற்படி ஆவணங்களின் சான்றிட்ட நகல் கைப்பற்றப்பட்டது.

13) மேலும் மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் தெற்கு பக்கத்தில் உள்ள கூட்ட மண்டபம் முன்பு தனது கையில் வெள்ளை நிற துணிப்பையுடன் நின்றிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் கே.குணசேகரன் என்றும் தான் பிளான் அப்ரூவல் பெற்று தரும் புரோக்கராக தொழில் செய்து வருவதாகவும், பிளான் அப்ரூவல் தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலரை பார்ப்பதற்காக வந்ததாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது கையில் வைத்திருந்த EMMANUEL PLANNERS Ln.T.ARUL YOHARAJ என்று சிகப்பு நிறத்தில் அச்சிடப்பட்ட வெள்ளை நிற துணிப்பையில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் ரூ.9,50,000/- இருந்தது. அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண். | ரூபாய் நோட்டுக்களின் விவரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | Rs.2000 x 447 | Rs.8,94,000.00 |
| 2 | Rs.500 x 72 | Rs.36,000.00 |
| 3 | Rs.200 x 100 | Rs.20,000.00 |
| | Total | Rs.9,50,000.00 |

இந்த பணம் குறித்து திரு.கே.குணசேகரன் அவர்களிடம் கேட்ட போது பிளான் அப்ருவல் வாங்க இரண்டு BDO க்களுக்கும் கொடுப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் லஞ்ச பணமாக இருக்கலாம் என்ற தகுந்த சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

14) மேலும் மேற்படி வராண்டாவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அறைக்கு பக்கத்தில் உள்ள கூட்ட மண்டபம் அருகே நின்றிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் டி.ஜி.மணி என்றும் தான் இதே அலுவலகத்தில் அலுவலக

உதவியாளராக பணிபுரிந்து 30.06.2008ந் தேதி பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டதாகவும் தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது கையில் வைத்திருந்த வெள்ளை நிற மற்றும் நீல நிற புள்ளிகள் கொண்ட பிளாஸ்டிக் கவரில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.9,830/- இருந்தது. இந்த பணம் குறித்து திரு.டி.ஜி.மணி அவர்களிடம் கேட்ட போது தனது கண் அறுவை சிகிச்சை செலவுக்கு வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.9,830/-ஐ அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

15) மேற்படி அலுவலகத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அறைக்கு பின்புறத்திலிருக்கும் ஆவண அறையின் தெற்கு பக்கத்தில் உள்ள ரேக்கில் உள்ள ஆவணங்களுக்கு நடுவே இருந்து யாரும் உரிமை கோராத பணம் ரூ.12,800/- (Rs.2000 x 6 ; Rs.500 x 1 ; Rs.100 x 3) கைப்பற்றப்பட்டது.

16) மேற்படி ஆவண அறையின் கீழே தரையில் சிதறிக் கிடந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது ரூ.5,500/- (Rs.2000 x 1 ; Rs.500 x 7) இருந்தது. இந்த பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. மேற்படி ரூ.5,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

17) மேலும் மேற்படி. வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் தெற்கு பக்கத்தில் உள்ள கூட்ட மண்டபம் முன்பு நின்றிருந்த மற்றொரு நபரை விசாரித்தபோது தனது பெயர் J.B.ஜான் ஜோசஸ் சிங் என்றும் தான் புனித தோமையர் மலை வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் கீழ் வரும் ஒட்டியம்பாக்கம் ஊராட்சி செயலாளராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது மாருதி சுசுகி பதிவு எண். TN11 M 9355 என்ற தனது காரில் இருப்பதாகவும் காரை இந்த வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தின் வடக்கு பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். அவரை அழைத்துக் கொண்டு அவரது காரை திறக்கச் சொல்லி அதிலுள்ள பணத்தை எடுத்துத் தருமாறு கேட்டதற்கு காரின் பின் சீட்டிலிருந்து பிரவுன் கலர் லெதர் கைப்பையை எடுத்து அதிலிருந்து முதலில் ஒரு காக்கி கவரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த கவரின் ஒரு புறத்தில் BDO / from Shanmugam என்று

பேனாவில் எழுதப்பட்டிருந்தது. மேற்படி கவரில் உள்ள பணத்தை ஆய்வு செய்தபோது அதில் ரூ.10,000/- (Rs.500 x 20) இருந்தது. மேற்படி பணம் குறித்து கேட்டதற்கு திரு.ஜான் ஜோசஸ் சிங் அவர்கள் சண்முகம் என்ற கான்டிராக்டர் BDO (VP) அவர்களுக்கு கொடுக்கச் சொல்லி அவரிடம் கொடுத்த பணத்தை கொடுப்பதற்காக எடுத்துவந்ததாக தெரிவித்தார். எனவே மேற்படி பணம் ரூ.10,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

18) மேற்படி திரு.ஜான் ஜோசஸ் சிங் இரண்டாவதாக தனது கைப்பையிலிருந்து காக்கி கவரை எடுத்து ஆஜர் செய்தார். அதில் பணம் ரூ.45,000/- (Rs.500 x 90) இருந்தது. தொடர்ந்து மேற்படி ஜான் ஜோசஸ் சிங் தனது கைப்பையிலிருந்து மூன்று ஐநூறு ரூபாய் கட்டுகள் மற்றும் ஒரு இரண்டாயிரம் ரூபாய் கட்டு, ஒரு 1 ரூபாய் கட்டு ஆகியவைகளை எடுத்து ஆஜர் செய்தார். ஐநூறு ரூபாய் தாள்கள் அடங்கிய ஒரு கட்டில் 90 நோட்டுகளும் (Rs.500 x 90), மற்றொரு கட்டில் 100 நோட்டுகளும் (Rs.500 x 100), அடுத்த கட்டில் 60 நோட்டுகளும் (Rs.500 x 60), இரண்டாயிரம் ரூபாய் கட்டில் 16 நோட்டுகளும் (Rs.2000 x 16), ஒரு ரூபாய் கட்டில் 58 நோட்டுகளும் (Rs.1 x 58) இருந்தது. மேற்படி திரு.ஜான் ஜோசஸ் சிங்கிடம் இருந்த மொத்த தொகை ரூ.2,14,058/- (Rs.2000X17; Rs.500X360; Rs.1X58) குறித்து அவரிடம் கேட்டதற்கு இவ்வலுவலக இரண்டு BDOக்களுக்கும் உயரதிகாரிகளுக்கும் தீபாவளிக்கு கொடுப்பதற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி கைப்பையிலிருந்து திரு.ஜான் ஜோசஸ் சிங் கீழ்கண்ட ஆவணங்களை ஆஜர் செய்தார்.

| வ.எண். | ஆவணம் | தாள்கள் |
|---|---|---|
| 1. | Indian Overseas Bank, Medavakkam Branch SB A/c No. 311601000004304 dt.30.01.2019 remittance slip in the name of J.B.John Joses Singh | 1 |
| 2. | Indian Bank, Rajakilpakkam Branch SB A/c No. 611383251 dt.16.09.2019 remittance slip in the name of J.B.John Joses Singh | 1 |
| 3. | Indian Overseas Bank, Medavakkam Branch SB A/c No. 311601000004304 dt.26.02.2015 remittance slip in the name of J.B.John Joses Singh | 1 |

| | | |
|---|---|---|
| 4. | Indian Overseas Bank, Medavakkam Branch SB A/c No. 311601000004304 dt.14.03.2015 remittance slip in the name of J.B.John Joses Singh | 1 |
| 5. | Indian Overseas Bank, Medavakkam Branch SB A/c No. 311601000004304 dt.15.04.2015 remittance slip in the name of J.B.John Joses Singh | 1 |
| 6. | Indian Overseas Bank, Medavakkam Branch SB A/c No. 311601000004304 dt.11.04.2015 remittance slip in the name of J.B.John Joses Singh | 1 |
| 7. | Indian Overseas Bank, Medavakkam Branch SB A/c No. 311601000004304 dt.22.04.2015 remittance slip in the name of J.B.John Joses Singh | 1 |
| 8. | Unregistered Sale deed document dt.13.04.2016 between J.B.John Joses Singh and Tr.V.Narayanasamy, S/o.Veeraiya thevaar, East Street, Narsingampet, Manjankudi Post, Kudavasal Taluk, Thiruvarur District. | 3 |
| 9. | Unregistered Sale deed document dt.24.12.2014 between Tr.V.Narayanasamy, S/o.Veeraiya thevar, East Street, Narsingampet, Manjankudi Post, Kudavasal Taluk, Thiruvarur District and Tr.V.Janarthanam, S/o.Vedagiri, Karanai puducherry, Thiruporur Taluk, Kancheepuram District. | 4 |
| 10. | St.Thomas Mount Panchayata Union, Ottiyambakkam Village Panchayat Work order dt. Nil, given to VRS Electricals & Civil Engineering Works, Madambakkam | 4 |

மேற்கண்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல் கைப்பற்றப்பட்டது.

19) மேலும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வடக்கே அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் அறையில் மேற்கில் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் கே.என்.வெங்கடேசன் என்றும் தான் இவ்வலுவலகத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக (சத்துணவு) பணிபுரிவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்க தனது TOYOTA ETIOS பதிவு எண். TN21 BZ 6699 என்ற தனது காரில் இருப்பதாகவும் காரை இந்த வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தின் வடக்கு பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும்

கூறினார். அவரை அழைத்துக் கொண்டு அவரது காரை திறக்கச் சொல்லி அதிலுள்ள பணத்தை எடுத்துத் தருமாறு கேட்டதற்கு காரின் டிரைவர் சீட்டிற்கு பக்கத்து சீட்டின் பின்புறம் உள்ள பையிலிருந்து கருப்பு நிற FASHION TRACK MEN'S WEAR A/C என்ற பிளாஸ்டிக் கவரை எடுத்து அதிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது மொத்தம் பணம் ரூ.1,00,000/- (Rs.500 x 200) இருந்தது. இந்த பணம் குறித்து திரு.வெங்கடேசன் அவர்களிடம் கேட்ட போது எந்தவித விளக்கமும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி பணம் லஞ்ச பணம் என்ற ஐயத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது மணிபர்சிலிருந்து ரூ.50/- எடுத்து காண்பித்தார். இந்த ரூபாய் 50 அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

20) இந்த இரு துறை கூட்டுத் தணிக்கை மறுநாள் (26.10.2019) காலை 06.30 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் முடிவில் ரொக்கம் ரூ.22,67,568/-, இரண்டு தங்க ஆபரணங்கள் எடை மொத்தம் சுமார் 76 கிராம் மற்றும் மேலே குறிப்பிட்ட ஆவணங்களும் கைப்பற்றப்பட்டது. பஞ்சாயத்து தொடர்பான ஆவணங்களை கைப்பற்றும்போது பணி தொடர்ந்து நடைபெற வேண்டிய அவசியத்தின் காரணமாக அவற்றின் அசலுக்கு பதிலாக சான்றொப்பமிட்ட நகல் கைப்பற்றபட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ அலுவலக ஊழியர்களுக்கோ உடமைகளுக்கோ எவ்வித இடையூறோ சேதாரமோ இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஒப்பம்/-திருமதி.பா.சரளா<br>மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலர்,<br>சென்னை மாவட்டம் | ஒப்பம்/-திருமதி.பா.ரேவதி,<br>ஆய்வுக்குழு ஆய்வாளர்,<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சென்னை. | ஒப்பம்/-திரு.ம.குமரகுருபரன்,<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-2,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. |
| ஒப்பம்/-திருமதி.எஸ்.ஜூடி. அபிகேல்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. | ஒப்பம்/-திரு.எஸ்.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. | ஒப்பம்/-திருமதி.கே.எஸ்.அனிதா,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை. |

| | | |
|---|---|---|
| ஒப்பம்/-திரு.எம்.பாஸ்கரன்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி),<br>புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம்,<br>சிட்லபாக்கம். | ஒப்பம்/-திரு.அ.பாஸ்கரன்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி),<br>புனித தோமையர் மலை ஊராட்சி ஒன்றியம்,<br>சிட்லபாக்கம். | ஒப்பம்/-திரு.ஜெயராமன், |
| ஒப்பம்/-திரு.மணிகண்டன் | ஒப்பம்/-திரு.வேலுச்சாமி | ஒப்பம்/-திரு.ராஜேஸ்வர சேதுபதி |
| ஒப்பம்/-திரு. வெங்கடேசன் | ஒப்பம்/-திரு.என்.எஸ்.பாபு | ஒப்பம்/-திரு.குணசேகரன் |

30/10/19

Inspector of Police
Special Investigation Cell
Vigilance and Anti-Corruption
Chennai - 600 016.